


**13.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் DC-யில் பிரதமர் திரு.நரேந்திரமோடி அதிபர் டொனால்டு ட்ரம்புடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

2. தேசிய ஓய்வூதிய திட்டங்கள் ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்படும் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. இளைஞர் சக்தியால் உத்வேகத்துடன் வளர்ந்து வரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய உணவு பதப்படுத்துதல்துறை அமைச்சர் திரு.சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

4. சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

5. தகவல் தொழில்நுட்ப கல்விக்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதி தமிழக பள்ளிகளில் முறையாக பயன்படுத்தப்படவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் **DC**-யில் அந்நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்புடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

முன்னதாக அந்நாட்டு புலனாய்வு அமைப்பின் இயக்குனர் **Tulsi Gabbard**-உடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பிரதமர் தீவிரவாத தடுப்பு, சைபர் பாதுகாப்பு, புதிய சவால்கள், அரசியல் புலனாய்வு உள்ளிட்டவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதித்தார்.

சர்வதேச பிராந்திய விஷயங்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதோடு, பாதுகாப்பான நிலையான சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட பங்களிப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

*********

நாடாளுமன்றம் - வக்ஃப் வாரியம்

வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா 2024 குறித்த நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிக்கை தொடர்பாக எதிர்கட்சி உறுப்பினர்கள் இன்று அமளியில் ஈடுபட்டதால் மக்களவை இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த அறிக்கை இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் அவை கூடியதும் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாடி கட்சி உறுப்பினர்கள், அவையின் மைய பகுதியில் கூடி கோஷமிட்டனர்.

அவை அலுவல்களுக்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா தொடர்ந்து வலியுறுத்தியதோடு, வக்ஃப் வாரிய அறிக்கை தாக்கல் செய்த பின்னர் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க அனுமதி வழங்கப்படும் என்றார்.

கேள்வி நேரம் மிக முக்கியமானது என்றும் அதற்கு இடையூறு விளைவிப்பது முறையான செயல் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

உறுப்பினர்கள் இதற்கு செவி சாய்க்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவைத்தலைவர் பிற்பகல் இரண்டு மணி வரை அவையை ஒத்திவைத்தார்.

இதனிடையே வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா மீதான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை பலத்த அமளியின் ஊடே மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

பிஜேபி உறுப்பினர் டாக்டர் மேதா விஷ்ரம் இந்த அறிக்கையின் நகலை அவையில் தாக்கல் செய்தார்.

எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷங்களை எழுப்பியவாறே காணப்பட்டதால், அவர்களை அமைதி காக்க அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் வேண்டுகோள் விடுத்தார்.

உறுப்பினர்கள் இதற்கு செவிமடுக்காததால் அவைத்தலைவர் சிறிது நேரம் அவையை ஒத்திவைத்தார்.

மீண்டும் மாநிலங்களவை கூடியதும் இப்பிரச்சனையை எழுப்பிய எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே எதிர்கட்சிகளின் குறிப்புகளை வக்ஃப் வாரியத்திற்கான நாடாளுமன்ற குழு தனது அறிக்கையில் சேர்க்கவில்லை என்றும், இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு பதில் அளித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு இப்பிரச்சனையில் எதிர்கட்சிகள் அவையை தவறாக வழிநடத்துவதாக குறை கூறினார்.

நாடாளுமன்ற கூட்டுக்குழு, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகவும், எதிர்கட்சிகளின் குறிப்புகள் அறிக்கையின் இணைப்பில் இடம்பெற்றிருப்பதாகவும் கூறினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனும் எதிர்கட்சிகளின் செயல்பாட்டை குறை கூறினார்.

மாநிலங்களவை முன்னவர் திரு.ஜே.பி.நட்டா பேசுகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரபுகளை மீறாமல் அரசியல் சாசனத்திற்குட்பட்டு மாநிலங்களவை செயல்பட ஒத்துழைப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்.

அவைத்தலைவரின் தொடர் கோரிக்கைகளை மீறி எதிர்கட்சி உறுப்பினர்கள் அவை அலுவல்களுக்கு ஊறு விளைவிப்பது வருத்தம் அளிப்பதாக குறிப்பிட்டார்.

எதிர்கட்சியினர் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இதனிடையே அரசின் பதில்களில் திருப்தி அடையாத எதிர்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

*********

<u>மன்சூக் மாண்டவியா</u>

ஒரே குடையின் கீழ் பல்வேறு தேசிய ஓய்வூதிய திட்டங்களை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் தற்போது 6 கோடி மக்கள் அரசின் ஓய்வூதிய திட்டங்களால் பயனடைவதாக சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் இலவச உணவு தானிய திட்டத்தின் கீழ் 80 கோடி மக்கள் பயனடைவதாகவும் அமைச்சர் கூறினார்.

*********

ஜிதேந்திராசிங்

நில அதிர்வு சவால்களை திறனுடன் எதிர்கொள்ள அரசு பல்முனை யுக்திகளை கையாள்வதாக மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று இதனை தெரிவித்த அவர் இமயமலையில் கண்காணிப்பு கருவிகள் உட்பட ஏராளமான முன் எச்சரிக்கை முறைகளை அரசு ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டார்.

நில அதிர்வுகளை எல்லா நேரங்களிலும் முன்கூட்டியே அறிவது சாத்தியமில்லை என்றாலும் தொழில்நுட்ப நடவடிக்கைகளால் இதுதொடர்பான சவால்களை எதிர்கொள்ள முடியும் என்றார்.

*********

சிராக் பாஸ்வான்

நம் நாடு இளைஞர்களை அதிக அளவில் கொண்ட பொருளாதார நாடாக திகழ்கிறது என்று மத்திய உணவு பதப்படுத்துதல்துறை அமைச்சர் திரு.சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

தஞ்சை தேசிய உணவு தொழில்நுட்ப மேலாண்மை கல்வி கழகத்தின் 3ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அமைச்சர் இளையோரின் கண்டுபிடிப்புகள் மற்றும் சாதனைகள் தேசிய அளவில் மட்டுமல்லாமல் உலக அளவில் முத்திரை பதிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்.

உணவுகளின் பாரம்பரிய சுவையை மேம்படுத்தி வெற்றிகாண வேண்டும் என்று அறிவுறுத்திய அவர் இதனை உறுதியுடனும், துணிவுடனும் செயல்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் சாதி வாரி கணக்கெடுப்பை தமது கட்சி ஆதரிப்பதாக குறிப்பிட்டார். -------வாய்ஸ்-------

சரோஜினி நாயுடு

சுதந்திர போராட்ட வீரர் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் பிறந்த நாள் தேசிய மகளிர் தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட சமூகவலைதள பதிவில் இந்திய சுதந்திர போராட்ட இயக்கத்தில் முக்கிய தூணாக திகழ்ந்தவர் கவிக்குயில் சரோஜினி நாயுடு என்றும், பெண்களுக்கான அடிப்படை உரிமைகளுக்காக போராடியவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

*********

முதலமைச்சர்

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

சென்னை அடையாறு பகுதியில் சுரங்க பாதை பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டார்.

மாதவரம் - சிப்காட்,

கலங்கரை விளக்கம் - பூவிருந்தவல்லி,

மாதவரம் - சோழிங்கநல்லூர் ஆகிய மூன்று வழிதடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதனிடையே குறைந்தவிலையில் மருந்துகள் கிடைக்கும் வகையில் ஆயிரம் இடங்களில் முதல்வர் மருந்தகங்களை முதலமைச்சர் வரும் 24ஆம் தேதி சென்னையிலிருந்து தொடங்கிவைக்கிறார்.

இதையொட்டி முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுடைய தகுதியுடையவர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

*********

<u>தொழுநோய்</u>

தமிழ்நாட்டில் தொழுநோய் ஒழிப்பு பரிசோதனை முகாம் இன்று தொடங்கியது.

அலுவலர்கள் வீடு வீடாக சென்று வரும் 28ஆம் தேதிவரை இப்பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

*********

<u>அண்ணாமலை</u>

தமிழக பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப கல்விக்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதி முறையாக செலவிடப்படவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் 6ஆம் வகுப்பிலிருந்தே தகவல் தொழில்நுட்ப கல்வி தனிப்பாடமாக இடம்பெறவில்லை என்றும், பள்ளி கல்வித்துறை இதுகுறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இதற்கான ஆய்வகங்களின் எண்ணிக்கை குறித்தும் திரு.அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

*********

<u>ஆளுநர்</u>

காசி தமிழ் சங்கமத்தின் 3-வது கட்டமாக ஒரே பாரதம் ! உன்னத பாரதம் ! இயக்கத்தின் கீழ் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி காசிக்கு செல்லும் ரயிலை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து இன்று கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

இந்த ரயிலில் ஏராளமான மாணாக்கர், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலாச்சார கலை வல்லுநர்கள் பயணம் மேற்கொள்கின்றனர்.

*********

உலக வானொலி தினம்

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது,

இத்தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்டுள்ள வாழ்த்தில் செய்திகள், கலாச்சார நிகழ்வுகள், இசை தொடங்கி, கதை சொல்லுதல் வரை படைப்பாற்றலை கொண்டாடும் வானொலியின் சிறப்பம்சத்தை பாராட்டியுள்ளார்.

வரும் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 23ஆம் தேதி ஆகாஷவாணியில் இடம்பெற உள்ள நிலையில் மக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வானொலியுடன் தொடர்புடைய அனைவருக்கும் பிரதமர் நல் வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் சமூக தாக்கங்களின் பிரதிபலிப்பாக வானொலி திகழ்கிறது என்றார்.

செய்திகள் வெளியிடுவது, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது, சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தை பறைசாற்றுவது போன்ற வானொலியின் சிறப்பம்சங்களை பாராட்டியுள்ளார்.

வானொலியும் காலநிலை மாற்றமும் என்ற இந்தாண்டின் கருப்பொருளோடு வருங்கால சந்ததியினருக்கான பாதுகாப்பான நிலையான எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதில் வானொலி இன்றியமையா பங்காற்றுவதாக கூறியுள்ளார்.

இத்தினத்தை ஒட்டி புதுதில்லியில் வானொலி விழாவில் தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு.சஞ்சய் ஜஜு, ஆகாஷவாணியின் தலைமை இயக்குனர் டாக்டர் பிரக்யா பாலிவால் கவுர் உள்ளிட்டோர் இன்று பங்கேற்றனர்.

நாட்டின் அனைத்து வானொலி நிலையங்களிலும் வானொலி தின கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் வானொலி தினத்தை ஒட்டி நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

திருச்சியை சேர்ந்த நேயர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்கையில்:

வாய்ஸ்

*********

மகேஷ் பொய்யாமொழி

தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வரும் மே 9ஆம் தேதி வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பொதுத்தேர்வுகளில் பணியாற்ற உள்ள கண்காணிப்பு அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர் 10, 11 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் மே 19ஆம் தேதி வெளியிடப்படும் என்றார்.

பார்வைதிறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி முதன்முறையாக நடப்பாண்டு 12ஆம் வகுப்பு தேர்வை கணினி முறையில் எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழகம் முழுவதும் 25 லட்சத்து 57 ஆயிரத்து 357 தேர்வர்கள் நடப்பாண்டு பொது தேர்வு எழுத உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பள்ளிகளில் பாலியல் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சம்மந்தப்பட்டவர்களின் கல்வி சான்றிதழ் ரத்து செய்யப்படும் என எச்சரித்தார்.

வாய்ஸ்

*********

சி.வி.கணேசன்

தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பொதுமக்கள் தங்களின் நீண்ட கால கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டு வருவதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் இத்திட்டத்தின் கீழ் 2 நாள் முகாமை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் பொதுமக்கள் இம்முகாமில் கலந்துகொண்டு பட்டா மாறுதல், ஓய்வூதியம், உள்ளிட்டவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம் என குறிப்பிட்டார்.

*********

இஸ்ரோ

இஸ்ரோ விஞ்ஞானி திரு. வீர முத்துவேல் உட்பட 4 பேரை தமிழ்நாடு உயர்கல்வி மன்ற உறுப்பினர்களாக நியமித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தரமணி உலக தமிழ் ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் திரு.பன்னீர்செல்வம்,

தனியார் தொழில்நுட்ப நிறுவன தலைமை செயல் அதிகாரி திரு.முரளிதரன்,

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக துணைவேந்தர் திரு.சந்திரசேகர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

*********

**<u>இருவரி</u>**

வேலூர் மாவட்டம் குடியாத்தம், பேரணாம்பட்டு உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் அதிகம் காணப்படுவதால் உரிய நடவடிக்கை எடுக்க கிராம மக்கள் வனத்துறையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீலகிரி மாவட்ட வன பகுதியில் மனித வனவிலங்கு மோதலை குறைக்கும் வகையில் வன முன்கள பணியாளர்களுக்கான மூன்று நாட்கள் ட்ரோன் பயிற்சி தொடங்கியது.

*********

<u>டென்னிஸ்</u>

பஹ்ரைன் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய்சுந்தர் பிரசாந்த் இணை – பிரிட்டன், டுனிசியா இணையை இன்று எதிர்கொள்கிறது.

*********

<u>கிரிக்கெட்</u>

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டிகள் நாளை தொடங்குகின்றன.

வதோதராவில் நாளை நடைபெறும் முதல் போட்டியில் குஜராத் ஜெயன்ட்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது